## தேச பக்தியை அளவிட அளவுகோல் நிர்ணயிப்பதா?

# வந்தே மாதரம் பாடாவிட்டால் தேசத் துரோகிகளா?

## மக்களவையில் — கனிமொழி கருணாநிதி காட்டமான கேள்வி!

புதுடெல்லி, ஆக. 1-

வந்தே மாதரம் பாடாவிட்டால் தேசத் துரோகிகளா? மக்களவையில் கனிமொழி கருணாநிதி பேசுகையில் கடும் எதிர்ப்பு தெரிவித்தார்.

இந்திய நாடாளுமன்றத்தின் மாநிலங்களவையில் (29.7.2026) அன்று நிறைவேற்றப்பட்ட வந்தே மாதரம் தொடர்பான சட்ட மசோதா நேற்று முன்தினம் மக்களவையிலும் நிறைவேறியது

இதற்கு எதிரான விவாதங்கள் பெரும் புயலை கிளப்பியுள்ளன. கழக நாடாளுமன்றக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி மற்றும் நீலகிரி தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.ராசா ஆகியோர் இந்த மசோதாவைக் கடுமையாக எதிர்த்துத் தங்களது கண்டன உரையை ஆற்றியுள்ளனர்.

அரசின் கொள்கைகளையும், மசோதாக்களையும் விமர்சிப்பவர்களைத் தேசத் துரோகிகளாகச் சித்தரிக்கும் போக்கு அதிகரித்துள்ளதாக அவர்கள் தங்களது உரையில் சுட்டிக்காட்டினர்.

மக்களவையில் பேசிய தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி, மத்திய அரசின் இந்த நகர்வுக்குக் கடுமையான எதிர்ப்பு தெரிவித்தார்.

தேசபக்தி என்பது கட்டாயத்தின் பேரில் கொண்டுவரப்பட வேண்டிய ஒன்றல்ல என்று சுட்டிக்காட்டிய அவர், "வந்தே மாதரம் பாடலை ஒருவர் பாடவில்லை என்பதற்காகவே அவரைத் தேசத் துரோகி என்று முத்திரை குத்துவது எந்த விதத்தில் நியாயமாகும்? தேசபக்தியை அளவிட இத்தகைய அளவுகோல்களை நிர்ணயிப்பது ஜனநாயக முறைக்கு முற்றிலும் எதிரானது" என்று வாதிட்டார்.

மேலும், மாற்றுக் கருத்துடையவர்களை உடனே தேசத் துரோகிகள் எனக் குற்றம் சாட்டும் போக்கு அதிகரித்து வருவதைச் சுட்டிக்காட்டி, உண்மையில் ஆளும் பாஜ கட்சியின் இத்தகைய பிரிவினைவாத



அணுகுமுறையே நாட்டின் ஒருமைப்பாட்டிற்கு எதிரானது என்று சாடினார்.

### ஜனநாயக உரிமைகள்

நாடாளுமன்ற ஜனநாயகத்தில் மசோதாக்கள் மீதான முறையான விவாதங்கள் தவிர்க்க முடியாதவை என்பதை வலியுறுத்திய கனிமொழி எம்பி, பின்வரும் முக்கியக் கருத்துக்களை முன்வைத்தார்:

### விவாதமின்றி நிறைவேற்றக்கூடாது!

எந்தவொரு சட்ட மசோதாவையும் எவ்வித விரிவான விவாதமும் இன்றி அவசர அவசரமாகச் சட்டமாக்கக் கூடாது.

கருத்துச் சுதந்திரப் பாதுகாப்பு!

நாட்டின் குடிமக்கள் தங்களது ஜனநாயகக் கருத்துக்களைத் தாராளமாகத் தெரிவிக்கும் உரிமை அரசியலமைப்பால் வழங்கப்பட்டுள்ளது.

### அரசியல் லாபம்!

தேசியப் பாடல்கள் மற்றும் தேசியச் சின்னங்களை வைத்துப் பொது மக்களிடையே அரசியல் லாபம் தேடும் முயற்சிகள் கைவிடப்பட வேண்டும்.

### ஆ.ராசா எம்.பி.யின் கடும் எதிர்ப்பு

கனிமொழி கருணாநிதி எம்.பி.யைத் தொடர்ந்து உரையாற்றிய ஆ.ராசா, இந்த மசோதாவின் பின்னணியில் உள்ள அரசியல் நோக்கங்களை மிகக் கடுமையாகக் கண்டித்தார்.

நாட்டின் இறையாண்மையையும், பன்முகத்தன்மையையும் பாதுகாப்பதே உண்மையான தேசபக்தி என்று குறிப்பிட்ட ஆ.ராசா, வந்தே மாதரம் பாடலின் வரலாற்றுப் பின்னணிகள் மற்றும் வரலாற்று ரீதியாகச் சமூகப் பிரிவினையை ஏற்படுத்தப் பயன்படுத்தப்பட்ட சூழல்களைச் சுட்டிக்காட்டினார். நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சிகளின் குரலை நசுக்கும் வகையில் இதுபோன்ற மசோதாக்கள் கொண்டு வரப்படுவதை ஏற்றுக் கொள்ள முடியாது என்று உறுதியாகத் தெரிவித்தார்.

### நாடாளுமன்றத்தில் வெடித்த காரசார விவாதம்!

தி.மு.க. எம்பிக்களின் இந்த அதிரடி பேச்சால் அவையில் கடும் கூச்சல் குழப்பமும் காரசாரமான விவாதங்களும் நிலவின. எதிர்க்கட்சிகள் தரப்பில், தேசியச் சின்னங்கள் மற்றும் பாடல்கள் மக்களின் உணர்வுகளோடு இணைந்தவையே தவிர, அவற்றைச் சட்டத்தின் மூலமாகப் பொதுமக்கள் மீது கட்டாயப்படுத்தித் திணிக்க முடியாது என்றும், போதிய விவாதம் இல்லாமல் மசோதாக்களை நிறைவேற்றுவது ஜனநாயக நெறிமுறைகளுக்கு விடுக்கப்படும் சவால் என்றும் குற்றம் சாட்டப்பட்டது.

### வந்தே மாதரம் தொடர்பான இந்த மசோதா!

வந்தே மாதரம் தொடர்பான இந்த மசோதா மீதான விவாதம் தற்போது தேசிய அளவில் பெரும் அரசியல் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது. நாடாளுமன்றத்தில் கனிமொழி கருணாநிதி மற்றும் ஆ.ராசா ஆகியோரின் உரைகள், நாட்டின் பன்முகத்தன்மை, கருத்துச் சுதந்திரம் மற்றும் ஜனநாயக உரிமைகளைப் பாதுகாப்பதன் முக்கியத்துவத்தை மீண்டும் ஒருமுறை வெளிப்படுத்தியுள்ளன. மசோதாக்களை நாடாளுமன்றத்தில் முறையான ஆய்விற்கும் விவாதத்திற்கும் உட்படுத்திய பின்னரே முடிவு செய்ய வேண்டும் என்ற எதிர்க்கட்சிகளின் கோரிக்கை மக்கள் மத்தியில் பரவலான கவனத்தைப் பெற்றுள்ளது.

## அரசு நிர்வாகங்களில் ஏ.ஐ. தொழில்நுட்பத்தை பாதுகாப்பாக செயல்படுத்த

# ஒன்றிய அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

## மக்களவையில் — தயாநிதிமாறன் கேள்வி!

புதுடெல்லி,ஆக.1-

அரசு நிர்வாகங்களில் செயற்கை நுண்ணறிவு எனப்படும் AI தொழில்நுட்பத்தை பாதுகாப்பாக செயல்படுத்த ஒன்றிய அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன? என்றும் இதுகுறித்து தமிழ்நாடு உள்ளிட்ட மாநில அரசுகளுடன் ஆலோசனை நடத்தப்பட்டுள்ளதா? என்றும் நாடாளுமன்றத்தில் மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் அவர்களிடம் கழக நாடாளுமன்றக் குழுத் துணைத் தலைவரும் மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினருமான தயாநிதி மாறன் பல கேள்விகளை எழுப்பியுள்ளார்.

அதன் விவரங்கள் பின் வருமாறு:

ஒன்றிய அரசின் பல்வேறு அமைச்சகங்களால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள



செயற்கை நுண்ணறிவு (AI) செயல் திட்டங்களின் விவரங்கள் என்ன? அவற்றில் ஒப்புதல் அளிக்கப்பட்டவை, நிராகரிக்கப்பட்டவை மற்றும் தற்போது பரிசீலனையில் உள்ளவை எத்தனை? அவற்றை மதிப்பீடு செய்வதற்காக பின்பற்றப்பட்ட அளவுகோல்கள் என்ன?

ஆட்சி நிர்வாகம் மற்றும் பொதுச் சேவை வழங்கலுக்கான AI செயல் திட்டங்களை உருவாக்கும்போது, தமிழ்நாடு உள்ளிட்ட மாநில அரசுகளுடன் ஒன்றிய அரசு ஆலோசனை நடத்தியுள்ளதா? அவ்வாறாயின் அதன் விவரங்கள் என்ன?

AI அடிப்படையிலான நிர்வாகத் தீர்வுகளைச் செயல்படுத்த மாநிலங்களுக்கு நிதி மற்றும் தொழில்நுட்ப உதவிகளை வழங்க அரசு திட்டமிட்டுள்ளதா, அவ்வாறு திட்டமிட்டிருந்தால் தமிழ்நாட்டிற்கு ஒதுக்கப்பட்ட நிதி விவரங்கள் என்ன?

அரசின் நிர்வாகங்களில் AIயை பயன்படுத்தும் போது, குறிப்பாக குடிமக்களுக்கு நேரடியாக சேவைகள் வழங்கும் அமைப்புகளில், வெளிப்படைத்தன்மை பொறுப்புணர்வு தரவுத் தனியுரிமை மற்றும் சுயாதீன தணிக்கை ஆகிய தரநிலைகள் பின்பற்றப்படுவதை உறுதிப்படுத்த அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் என்ன?

AI தொழில்நுட்பத்தை மாநிலங்களுக்கிடையே சமநிலையுடன் பரவலாகப் பயன்படுத்துவதை உறுதி செய்யவும், தொழில்நுட்பத்தில் முன்னேறிய தமிழ்நாடு போன்ற மாநிலங்களுக்கு AI உள்கட்டமைப்பு, ஆராய்ச்சி மற்றும் திறன்மிக்க மனிதவள மேம்பாட்டிற்கான சமமான ஆதரவு கிடைப்பதை உறுதி செய்யவும் மாநில ரீதியான ஏற்றத்தாழ்வுகளைத் தடுக்கும் வகையில் அரசு ஏதேனும் கொள்கை திட்டம் வகுத்துள்ளதா?

இவ்வாறு தயநிதி மாறன் கேள்வி எழுப்பினார்.

## மொழிப்போர்த் தியாகி கீழப்பழுவூர் சின்னசாமியின் பேத்தி

# சாந்தினி உயர்கல்வி படிக்க உதவித் தொகை ரூ.1 லட்சம்!

## கழக இளைஞர் அணி அறக்கட்டளை சார்பில் — முன்னாள் அமைச்சர் சி.வெ.கணேசன் வழங்கினார்!



கடலூர், ஆக.1-

இந்தித் திணிப்புக்கு எதிரான போரில், தாய்த் தமிழுக்காகத் தன்னுயிரை நீத்த மொழிப்போர் தியாகி, கீழப்பழுவூர் சின்னசாமி அவர்களின் மகள் திராவிடச் செல்வி அவர்கள், அண்மையில் கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களைச் சந்தித்து, தனது பேத்தி சாந்தினி அவர்கள் உயர்கல்வி படிக்க உதவித்தொகை கேட்டுக் கோரிக்கை வைத்திருந்தார்.

அவரது கோரிக்கையினை ஏற்று, கழக இளைஞர் அணி அறக்கட்டளை சார்பில், ஒரு இலட்சம் (1,00,000) ரூபாய் நிதி உதவியாக வழங்க, இளைஞர் அணிச் செயலாளரும் எதிர்க்கட்சித் தலைவருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அறிவுறுத்தியிருந்தார்.

அதன்படி, கடலூர் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் சி.வெ. கணேசன் தலைமையில், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் எம்.எஸ். கணேஷ்குமார் மற்றும் துணை அமைப்பாளர்கள் முன்னிலையில், நிதி உதவிக்கான காசோலையைத் திராவிடச் செல்வி அவர்களின் குடும்பத்தினரிடம் வழங்கினார்கள்.

ஒன்றியக் கழகச் செயலாளர்கள் வேல்முருகன், கனக கோவிந்தசாமி, சுரேஷ், நகரக் கழகச் செயலாளர் தண்டபாணி உள்ளிட்ட கழக நிர்வாகிகள் மற்றும் இளைஞர் அணியினர் உடனிருந்தனர்.



கழகத்தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்களை — கழக தேர்தல் பணிக்குழுத் தலைவர் முன்னாள் அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன், தனது பிறந்தநாளை முன்னிட்டு நேரில் சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.




திருச்சி,ஆக.1-

ஆண்டு முழுவதும் நீருடன் காணப்பட்ட காவிரி மற்றும் கொள்ளிடம் ஆறுகள் தற்போது வறட்சியின் தாக்கத்தை எதிர்கொண்டு வருகின்றன.

கர்நாடகாவில் இருந்து காவிரி நீர் திறக்கப்படாததால், திருச்சி கொள்ளிடம் பகுதியில் உள்ள பிரதான குடிநீர் கிணறுகளில் நீர்மட்டம் கடுமையாக குறைந்துள்ளது. ஜூன் மாதத்தில் நிமிடத்திற்கு 6,000 லிட்டராக இருந்த நீர்வாங்கல், ஜூலை இறுதியில் 2,000 லிட்டராக சரிந்தது. இந்த நிலை தொடர்ந்தால், திருச்சி மாநகரின் பல பகுதிகளில் குடிநீர் விநியோகம் பாதிக்கப்படும் அபாயம் அதிகரித்துள்ளது.

தமிழ்நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் விவசாயம் மற்றும் குடிநீர் தேவைகளை பூர்த்தி செய்வதில் முக்கிய பங்கு வகித்து வருகிறது காவிரி ஆறு. இந்நிலையில், கர்நாடகாவில் இருந்து தமிழகத்திற்கு கிடைக்க வேண்டிய தண்ணீர் திறந்துவிடப்படவில்லை. இதனால் நீர்வரத்து குறைந்துள்ளதால், காவிரி ஆற்றில் நீர்மட்டம் குறைந்து வறட்சி நிலை காணப்படுகிறது.

திருச்சி கொள்ளிடம் ஆற்றுப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள மூன்று பிரதான குடிநீர் கிணறுகள் மூலம், மாநகர மக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இந்த கிணறுகளில் இருந்து அதிக திறன் கொண்ட மின்மோட்டார்கள் மூலம் நிமிடத்திற்கு 14000 லிட்டர் தண்ணீர் எடுக்கப்பட்டு வருகிறது. ஆனால் கடந்த சில காலமாக நிலவி வரும் வறட்சி காரணமாக, இந்த கிணறுகளில் இருந்து கிடைக்கும் நீரின் அளவு படிப்படியாக குறைந்து வருவதாக கூறப்படுகிறது.

காவிரியில் நீர்வரத்து குறைந்ததால், கடந்த ஜூன் முதல் வாரத்தில் கொள்ளிடம் ஆற்றின் பிரதான கிணறுகளில் இருந்து எடுக்கப்பட்ட நீரின் அளவு நிமிடத்திற்கு சுமார் 6,000 லிட்டராக குறைந்ததாக தெரிவிக்கப்பட்டது. இதன் காரணமாக குடிநீர் விநியோகத்தில் பாதிப்பு ஏற்படும் சூழல் உருவாகியுள்ளது.

ஜூலை இறுதியில் நீரின் அளவு மேலும் குறைந்து நிமிடத்திற்கு சுமார் 2,000 லிட்டர் அளவுக்கு சரிந்ததாக கூறப்படுகிறது. இதே நிலை தொடர்ந்தால், வரும் நாட்களில் கொள்ளிடம் ஆற்றின் குடிநீர் ஆதார கிணறுகளில் நீர் பற்றாக்குறை ஏற்பட்டு, திருச்சி மாநகரின் சில பகுதிகளில் குடிநீர் விநியோகம் பாதிக்கப்படும் அபாயம் இருப்பதாக அச்சம் தெரிவிக்கப்படுகிறது.

ஒருகாலத்தில் ஆண்டு முழுவதும் நீருடன் காணப்பட்ட காவிரி மற்றும் கொள்ளிடம் ஆறுகள் தற்போது வறட்சியின் தாக்கத்தை எதிர்கொண்டு வருகின்றன. ஆற்றில் நீர்வரத்து குறைந்துள்ளதால், நிலத்தடி நீர் ஆதாரங்களும் பாதிக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

காவிரி நீர்ப்பங்கீடு விவகாரத்தில் உரிய காலத்தில் நீர் கிடைக்காவிட்டால், திருச்சி உள்ளிட்ட காவிரி டெல்டா மற்றும் அதைச் சார்ந்த பிரதான மாவட்டங்களில் குடிநீர் மற்றும் விவசாய பாதிப்புகள் ஏற்படும் அபாயம் இருப்பதாக அஞ்சப்படுகிறது.

செயல்படா த.வெ.க. அரசின் நிர்வாகச் சீர்கேட்டால் பாலைவனமாக காட்சியளிக்கும் கொள்ளிடம், வறட்சியின் காரணமாக மாநகர மக்களுக்கான குடிநீர் விநியோகம் முற்றிலும் தடைபடும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

## தஞ்சையில் எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் தலைமையில் மாபெரும் ஆர்ப்பாட்டம்!

# கடலூர் கிழக்கு மாவட்டக் கழகத்தினர் திரளாகப் பங்கேற்பீர்!

## மாவட்டச் செயலாளர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் எம்.எல்.ஏ. வேண்டுகோள்!

கடலூர், ஆக. 1-

தி.மு.க. சார்பில் தஞ்சாவூரில் எதிர்கட்சி தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் தமிழ்நாடு விவசாயப் பெருமக்களின் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தியும், காவிரி உரிமையை நிலைநாட்டுவதில் த.வெ.க. அரசின் மெத்தனப்போக்கைக் கண்டித்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் வருகிற 3-ஆம் தேதி அன்று நடைபெறுகின்றது. இந்த ஆர்ப்பாட்டத்தில் கடலூர் கிழக்கு மாவட்டத்தை சேர்ந்த கழக நிர்வாகிகள் தோழர்கள் விவசாய சங்கங்களின் பிரதிநிதிகள் பெருந்திரளாக கலந்து கொள்வீர் என்று மாவட்ட செயலாளர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் எம்.எல்.ஏ. வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது குறித்து அவரது அறிக்கை வருமாறு:-

கழகத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க தி.மு.க. சார்பில் தமிழ்நாடு விவசாயப் பெருமக்களின் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி, காவிரி உரி



மையை நிலைநாட்டுவதில் த.வெ.க அரசின் மெத்தனப்போக்கைக் கண்டித்து வருகின்ற 03.08.2026 (திங்கட்கிழமை) காலை 10.00 மணியளவில் தஞ்சாவூர், பனகல் கட்டடம் அருகில் எதிர்க்கட்சி தலைவர், கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற உள்ளது.

அதுசமயம் இந்த ஆர்ப்பாட்டத்தில் கடலூர் கிழக்கு மாவட்டத்தை சேர்ந்த மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், கிளை வட்டம், வார்டு கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், முன்னாள், இந்நாள் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் உள்ளாட்சிப் பிரதிநிதிகள், மாநகர மேயர், மண்டல குழு தலைவர்கள், நகராட்சி, பேரூராட்சி மன்ற தலைவர்கள், துணைத் தலைவர்கள் மற்றும் மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள் மற்றும் முன்னாள் ஊராட்சி ஒன்றியக்குழு தலைவர்கள், ஊராட்சி மன்றத் தலைவர், துணைத் தலைவர்கள், முன்னாள் மாவட்டக்குழு, ஒன்றியக் குழு ஊராட்சி மன்ற உறுப்பினர்கள், மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக இளைஞரணி, மாணவரணி, மகளிரணி, மகளிர் தொண்டரணி, வழக்கறிஞர் அணி, விவசாய அணி, விவசாய தொழிலாளர் அணி, இலக்கிய அணி, கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை, தொண்டரணி, தொழிலாளர் அணி, மீனவரணி, நெசவாளர் அணி, பொறியாளர் அணி, மருத்துவர் அணி, வர்த்தகர் அணி, ஆதிதிராவிடர் நலக் குழு அணி, சிறுபான்மையினர் நல உரிமை பிரிவு, தகவல் தொழில்நுட்ப அணி, சுற்றுச்சூழல் அணி, அயலக அணி, விளையாட்டு மேம்பாட்டு அணி, அமைப்பு சாரா ஓட்டுநர் அணி மற்றும் தொழிலாளர் முன்னேற்றச்சங்கம் ஆகிய அணிகளின் நிர்வாகிகள், கழக முன்னோடிகள், கழக தோழர்கள், அனைத்து விவசாயிகள் மற்றும் விவசாயச் சங்கங்களை சேர்ந்த தோழர்களும், இவ்விவகாரத்தில் ஒருமித்த கருத்துடைய அனைத்து அரசியல் கட்சிகளின் தோழர்களும், பொது மக்கள் அனைவரும் போராட்டத்தில் பெருந்திரளாக கலந்து கொள்வீர்.

இவ்வாறு மாவட்ட செயலாளர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் எம்.எல்.ஏ. கேட்டுக்கொண்டுள்ளார்.